செய்தி வெளியீடு எண்: 271 நாள்: 08.06.2015

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (8.6.2015) தலைமைச் செயலகத்தில், பொதுப்பணித் துறையின் சார்பில் திருப்பூர் மாவட்டம் – தாராபுரம், அமராவதியாற்றின் குறுக்கே 7 கோடியே 60 லட்சத்து 37 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தடுப்பணையினை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாகத் திறந்து வைத்தார்கள். மேலும், 91 கோடியே 28 லட்சத்து 26 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள உயர்மட்டப் பாலம், தடுப்பணைகள், படுகை அணை, கீழ்மட்ட நிலத்தடி தடுப்புச் சுவர், வழங்கு கால்வாய்கள், ஆய்வு மாளிகை, அலுவலகக் கட்டடங்கள் மற்றும் குடியிருப்புகள் ஆகியவற்றையும் திறந்து வைத்தார்கள்.

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு வித்திடும் விவசாயத்தை மேம்படுத்தும் வகையிலும், மக்களின் குடிநீர் தேவைகளைப் பூர்த்தி செய்யவும், கிடைக்கப்பெறும் நீரை வீணாக்காமல் நீர்நிலைகளில் தேக்கி வைக்கும் பொருட்டும், பல்வேறு பாசன மேம்பாட்டுத் திட்டங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமையிலான அரசு செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், திருப்பூர் மாவட்டம் – தாராபுரம், அமராவதியாற்றின் குறுக்கே 7 கோடியே 60 லட்சத்து 37 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தடுப்பணையினை காணொலிக் காட்சி மூலமாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள்.

மேலும், அரியலூர் மாவட்டம், அம்பலவார் கட்டளை – சுண்டக்குடி சாலை, மருதையாற்றின் குறுக்கே 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள உயர்மட்டப் பாலம்;

கடலூர் மாவட்டம் – கூத்தப்பாக்கம் கிராமம் அருகில் கெடிலம் ஆற்றின் குறுக்கே 16 கோடியே 24 லட்சத்து 5 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தடுப்பணை;

திண்டுக்கல் மாவட்டம் – ஒட்டன்சத்திரம் வட்டம், ஜவ்வாதுபட்டி புதூர் கிராமம் அருகில் நங்காஞ்சியாற்றின் குறுக்கே 1 கோடியே 10 லட்சத்து 90 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தடுப்பணை மற்றும் வேடசந்தூர் வட்டம், திருக்கூர்ணம்

கிராமம் அருகில் குடகனாற்றின் குறுக்கே 4 கோடியே 10 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தடுப்பணை;

கரூர் மாவட்டம் – அரவக்குறிச்சி வட்டம், ராஜபுரம் கிராமம், அமராவதி ஆற்றின் குறுக்கே 2 கோடியே 86 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தடுப்பணை;

இராமநாதபுரம் மாவட்டம் – பரமக்குடி வட்டம், பார்த்திபனூர் நீரொழுங்கியின் கீழ் வைகை ஆற்றின் குறுக்கே குன்னப்பனேந்தல் கிராமம் அருகில் 19 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தடுப்பணை மற்றும் வைகை ஆற்றின் குறுக்கே போகலூர் ஒன்றியம், வலசை கிராமம் அருகில் கீழ்நாட்டார் கால்வாய் மற்றும் 16 கண்மாய்கள் பாசன வசதி பெறும் பொருட்டு 19 கோடியே 86 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள படுகை அணை;

சிவகங்கை மாவட்டம் – திருப்பத்தூர் வட்டம், முறையூர் கிராமத்தில் பாலாற்றின் குறுக்கே 1 கோடியே 45 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தடுப்பணை;

தேனி மாவட்டம் – தேனியாறு உபவடிநிலம், கொட்டகுடி கிராமம் கொம்புதூக்கி அய்யனார் கோவில் அருகில் கொட்டகுடி ஆற்றின் குறுக்கே 70 லட்சத்து 93 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தடுப்பணை; அணைக்கரைப்பட்டி கிராமம் சன்னாசிபுரம் சிற்றூர் அருகில் கொட்டகுடி ஆற்றின் குறுக்கே 1 கோடியே 1 லட்சத்து 37 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தடுப்பணை மற்றும் மேல் வைகை உபவடிநிலம், அம்மச்சியாபுரம் கிராமம் அருகே வைகை ஆற்றின் குறுக்கே 2 கோடியே 29 லட்சத்து 23 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தடுப்பணை;

திருப்பூர் மாவட்டம் – சாலைத்துறை கிராமத்தில் 4 கோடியே 18 லட்சத்து 70 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தடுப்பணை;

வேலூர் மாவட்டம் – குடியாத்தம் வட்டம், சீவூர் கிராமத்தில், கவுண்டன்யா நதியின் குறுக்கே 3 கோடியே 84 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கீழ்மட்ட நிலத்தடி தடுப்புச் சுவர்;

தேனி மாவட்டம் – மேல் வைகை உபவடிநிலத்தில், துரைசாமிபுரம் கிராமத்தில் உள்ள துரைசாமிபுரம் அணையிலிருந்து சக்கிலிச்சிகுளம் மற்றும் நல்லிடைச்சேரி கண்மாய்களுக்கு நீர் வழங்கும் பொருட்டு 2 கோடியே 97 லட்சத்து 9 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் புனரமைக்கப்பட்டுள்ள வழங்கு கால்வாய்கள்;

என மொத்தம் 97 கோடியே 74 லட்சத்து 14 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 11 தடுப்பணைகள், உயர்மட்டப் பாலம், ஒரு படுகை அணை, ஒரு கீழ்மட்ட நிலத்தடி தடுப்புச் சுவர், வழங்கு கால்வாய்கள் ஆகிய கட்டமைப்புகளை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள்.

ஈரோடு மாவட்டம் – அந்தியூர் மற்றும் சத்தியமங்கலத்தில் கட்டப்பட்டுள்ள நீர்வள ஆதாரத் துறையின் பிரிவு அலுவலகக் கட்டடங்கள்; கன்னியாகுமரி மாவட்டம் – நாகர்கோவிலில் கட்டப்பட்டுள்ள நீர்வள ஆதாரத் துறையின் பிரிவு அலுவலகங்களுடன் கூடிய திட்டமிடுதல் மற்றும் வடிவமைப்பு உபகோட்ட கட்டடம்; திருப்பூர் மாவட்டம் – உடுமலைப்பேட்டை வட்டம், அமராவதி நகரில் கட்டப்பட்டுள்ள நீர்வள ஆதாரத் துறையின் பிரிவு அலுவலர் குடியிருப்புக் கட்டடம் மற்றும் பிரிவு அலுவலகக் கட்டடம்;

பொதுப்பணித் துறையின் சார்பில் ஈரோடு நகரத்தில் கட்டப்பட்டுள்ள அலுவலர் குடியிருப்பு; நீலகிரி மாவட்டம் – உதகமண்டலத்தில் கட்டப்பட்டுள்ள நகரப்பிரிவு மற்றும் ராஜ்பவன் பிரிவு அலுவலகக் கட்டடம்; விருதுநகர் மாவட்டம் – சிவகாசியில் கட்டப்பட்டுள்ள ஆய்வு மாளிகை கட்டடம்,

என 1 கோடியே 14 லட்சத்து 49 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அலுவலகக் கட்டடங்கள், ஆய்வு மாளிகை மற்றும் குடியிருப்புகள் ஆகியவற்றை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று பொதுப்பணித் துறையின் சார்பில் திறந்து வைத்த திட்டங்களின் மொத்த மதிப்பு 98 கோடியே 88 லட்சத்து 63 ஆயிரம் ரூபாய் ஆகும்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு நிதி மற்றும் பொதுப்பணித் துறை அமைச்சர் திரு ஓ. பன்னீர்செல்வம், மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் திரு எம்.சி. சம்பத், மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். சுந்தரராஜ், தலைமைச் செயலாளர் திரு கு. ஞானதேசிகன், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு ஆலோசகர் திருமதி ஷீலா பாலகிருஷ்ணன், இ.ஆ.ப., (ஓய்வு), பொதுப் பணித் துறை முதன்மைச் செயலாளர் திரு நா.ச. பழனியப்பன், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9.
நாள் : 8.6.2015